ICAF PVR
with the support of GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
CIFF

# DAILY BUZZ

18th Chennai International Film Festival 24th Feb 2021

## Wish I was the Director of 'Forrest Gump'! : Dir. Hamidreza Ghotbi

*Dir. Hamidreza Ghotbi is a theatre person turned Director. In a casual chat with Divya Jay of the CIFF team he tells us his favourite genres of films and how he feels about his film making it to CIFF for the 2nd time in a row!*

*Divya Jay: How and what made you get into films and filmmaking?*

*Dir. Hamidreza Ghotbi:* I started my acting and directing career in theatre and then in 1985 I continued my journey as an assistant director and making short & documentary films. I made my first movie "Jame Daran" in 2013 that won the Best Film award in the 14th Chennai International Film Festival (2016). My second venture is "That Night's Train", a film for children and young adults.



Dir. Hamidreza Ghotbi

*Divya Jay: What are the hurdles in the path of a filmmaker?*

*Dir. Hamidreza Ghotbi:* Writing a different and amusing script for the audience, gathering necessary investment to make the movie, choosing proper cast and crew, overcoming censorships and relevant restrictions and finally struggling to release the film commercially and avoiding any possible economic failure.

*Divya Jay: What genres of films do you like making?*

*Dir. Hamidreza Ghotbi:* My main field of interest is family and social issues. Moreover, drama feature films have always been within my spotlight.

*Divya Jay: What does it take to be a good filmmaker?*

*Dir. Hamidreza Ghotbi:* Persistence and tolerance are essential in achieving the aim in making a feature film. Those who do not have the necessary financial means have no other choice but resistance and tolerance.

*Divya Jay: How is short film making differ from making feature films?*

*Dir. Hamidreza Ghotbi:* Before making feature films, I have made a few short and documentary films not only targeting the educational filmmaking sector but also they have been used as important sources for film production training. Unlike short films that require a specific and eye-catching idea, a feature film requires a thoughtful perspective due to its long and extensive narrative.

*Divya Jay: How do you pick your cast/crew for the film?*

*Dir. Hamidreza Ghotbi:* Of course the casting of actors and actresses should be based on their similarity with the idea of the written role. However, to be honest due to some financial issues this is not been the case for my film.

*Divya Jay: Tell us about your favourite filmmakers.*

*Dir. Hamidreza Ghotbi:* I like filmmakers such as Billy Wilder, Akira Kurosawa, David Lean, Scorsese and recently Nolan and Tornatore. Moreover, I wish I was the Director of the films "Forrest Gump" & "Interstellar".

*Divya Jay: Please give a message to budding filmmakers.*

*Dir. Hamidreza Ghotbi:* Cinema is that blazing hell that burns its creators with its fascinating colours. However, many other creators awake from the ashes that remain and flame.

*Divya Jay: How does it feel to be making a comeback at CIFF?*

*Dir. Hamidreza Ghotbi:* Of course I'm pleased to be selected once again by the prestigious Chennai International Film Festival and I hope that we will meet once again in a corona free world which is kinder and friendlier.

- Divya Jay

## Film Appreciation

Film appreciation is a subject on which, off and on, various classes, seminars and symposiums are conducted by veterans in the field, the film makers and the film enthusiasts. It assumes a great significance on the part of the film maker, the audience and film critiques since making of the film, the 'Emperor' of all art forms, which has of late become a mammoth enterprise involving huge manpower and money and can overnight make or mar the entrepreneur, a lot of responsibility and understanding are called for in their judgements to cater to the needs and expectations of film lovers, a hugely emerging and emancipated lot of late, thanks to their exposure to World Cinema through various media and methods of film viewing. An IFF, for example, is one such avenue which these days attracts audience as varied as a connoisseur or commoner. Thus Film Appreciation has to be inculcated into the minds of film lovers, in my view, as any other subject of study so as not to rush to the 'off the sleeve' comments but to help evaluate judiciously and responsibly the intents and purpose with which a film maker attempts to present his creation in the form of a film.

I am not a film maker but write this as a humble film lover exposed to view many a classic and sometimes even some ordinary movies as a Film Society Enthusiast and it is an attempt to raise some points on a vast subject viz., FILM APPRECIATION for which stalwarts in the field have made sterling contributions. This is just 'MY TAKE' on the subject.

*V Srinivasan, Former Jt.Sec, ICAF*



**Soorari Pottru**

will be screened again at 2.30 pm on Feb 25 at PVR - Seasons!

# Screening Schedule Day 7 | Wednesday 24.02.21

Change in Schedule

| Venue | | | | |
|---|---|---|---|---|
| Santham | 10.15 AM On the Quiet, Dir.: Zoltán Nagy, Hungary, 2019 \| 80'\| GH | 01.00 PM Apples, Dir.: Christos Nikou, Greece, Poland, Slovenia, 2020 \| 91'\| WC | 03.30 PM Careless Crime, Dir.: Shahram Mokri, Iran, 2020 \| 134'\| IDP | 06.00 PM Cleo, Dir.: Erik Schmitt, Germany, 2019 \| 99'\| GF |
| Serene | 10.15 AM When I'm Done Dying, Dir.: Nisan Dag, Turkey, USA,Germany, Estonia, 2020 \| 97'\| WC | 01.00 PM Medea, Dir.: Alejandro Moreno, Chile, 2019 \| 75'\| CC | 03.00 PM Revenir, Dir.: Jessica Palud, France, 2019 \| 77'\| CFF | 06.15 PM Nafi's Father, Dir.: Mamadou Dia, France, Senegal, 2019 \| 107'\| CFF |
| Seasons | 10.00 AM My Lake \| Dir.: Gjergj Xhuvani \| Kosovo, Germany, Croatia, Republic of North Macedonia, Italy, Albania \|2020\|100'\|WC | 12.30 PM Amala, Dir.: Nishad Ebrahim, Tamil, 2020 \| 121' \| IP | 03.00 PM Galtha, Dir.: S. Hari Uthraa, Tamil, 2020 \| 110' \|TFFC | 05.30 PM Ka Pe Ranasingham, Dir.: P. Virumandi, Tamil, 2020 \|177'\| TFFC |
| 6 Degrees | 09.30 AM Listen, Dir.: Ana Rocha, Portugal, UK, 2020 \| 73'\| WC. | 01.00 PM M, Dir.: Yolande Zauberman, France, Israel, 2019 \| 105'\| CFF | 05.15 PM Mastermind, Dir.: Azita Moguie, Spain, Iran, 2019 \|94'\| IDP | 07.10 PM Gatham, Dir.: Kiran Kondamadugula, Telugu, 2020 \| 101' \| IP |
| SDC Anna Cinemas | 10.00 AM In the Dusk, Dir.: Šarūnas Bartas \| Serbia, France, Czech Republic,Latvia, Lithuania, Portugal, 2020\|128'\| WC | 01.00 PM All the Pretty Little Horses, Dir.: Michalis Konstantatos, Greece, Belgium,Germany, 2020 \| 107'\| WC | 03.00 PM The Wasteland, Dir.: Ahmad Bahrami, Iran, 2020 \| 102'\| IDP | 06.00 PM You Know Him, Dir.: Ercan Kesal, Turkey, 2020 \|105'\| WC |

TFFC = Tamil Feature Film Competition

IP = Indian Panorama

WC = World Cinema

CFF = Country Focus France

IDP = Iran - Different Perspective

GC = German Cinema

GH = Glimpses of Hungary

CC = Chilean Cinema

**Master Class by**
Mr.Arul Murthy, CG Artist
11.30 am / 6 Degrees

**Master Class by**
Ms.Kalairani, Actress
03.30 pm / 6 Degrees

**Seating for all shows will be on first come first served basis**

## World Films Not to Miss at CIFF TODAY!




**In the Dusk**
10 am at
SDC Anna Cinemas




**Listen**
9.30 am at
PVR - 6 Degrees




**Nafi's Father**
6.15 pm
at PVR - Serene




**Revenir**
3 pm at
PVR - Serene




**Careless Crime**
3.30 pm at
PVR - Santham

## Reaction from Our Audience

Berlin Alexanderplatz is an amazing perspective of the novel in the same name. The acting of the antagonist is so brilliant in way he carries till the end. He is the blossom of rage within a fair bird who is also wounded with reasons. Berlin is all you love for the hate it has.
*Rating: 9/10 (by Dr. Prabhu)*

I really loved watching the Tulu movie 'Pingara'. Taught me a lot about Tulu nadu and its culture. All the actors played their role really well. Happy to see such content-rich films.
*Rating: 8.5/10 (by Dir. Arunkumar)*

Watching the Marathi film Karikhansaachi Waari was a true delight. Enjoyed every minute of it and love the way such a serious and stressful subject is dealt with a fun and humorous way. Hats off to the filmmakers!
*Rating: 9/10 (by Divya P)*

A Good Man: Benjamin and Aude seem to be a normal couple. Meanwhile, Aude cannot have a baby, she feels very guilty. Benjamin decides to carry the baby himself. Suddenly we come to know, Benjamin was once a girl named Sarah.
*Rating: 8.5/10 (by KB Shree Karthik)*

I Never Cry is the story of A seventeen year polish girl Ola who desperately tries to pass the driving test to get license so she can drive a car her dad has promised. The ending is a delightful twist to the story. Script was very very tight and taut!
*Rating: 8/10 (by Raj Iyer)*

## Pic Corner




Pingara Team @ CIFF

# சிறப்பு!

சிறப்புக் குழந்தைகளைப் பார்த்தால் நாம் என்ன செய்வோம்? `அடடா' என்று ஒரு பரிதாபப் பார்வை பார்ப்போம். அல்லது ஒரு புன்னகை சிந்துவோம். அடுத்த நொடியே அவரவர் வாழ்க்கைக்குள் மூழ்கிவிடுவோம். ஆனால், ஒரு சிறப்புக் குழந்தை - இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் அந்தக் குழந்தையின் பெற்றோர் படும் பாடு வேறு எவராலும் உணர்ந்துகொள்ள முடியாத அளவு கொடூரமானது.

பக்கத்து வீட்டில் ஒரு தம்பதி இருந்தார்கள். ஒரே ஒரு குழந்தை... சிறப்புக் குழந்தை. பத்து வயதுக்கு மேலாகிவிட்டது. ஆனால், படுக்கையை விட்டு எழவே முடியாது. அவனுக்கு அம்மாதான் உணவூட்ட வேண்டும். தேவையான எல்லா விஷயங்களையும் பார்த்துப் பார்த்து செய்ய வேண்டும். சிறுவன்தான் என்றாலும் இருக்கும் இடத்திலேயே இருப்பதால் எடை அதிகரித்துக்கொண்டே இருக்கும். அவனை ஒற்றை ஆளாகத் தூக்கி குளிக்க ஊற்றுவது எல்லாம் சாதாரண காரியமல்ல.



ஒருநாள் அவனையும் அழைத்துக்கொண்டு அம்மாவும் அப்பாவும் பயணம் செய்யும்போது ஒரு விபத்து. பெற்றோருக்குப் பலத்த காயம். குழந்தைக்கு எந்தக் காயமும் இல்லை. அப்பாவும் அம்மாவும் காயப்பட்டு கிடப்பதைக்கூட அறியாமல் தனது வழக்கமான புன்னகையோடு இருந்தான்.

பின்னொரு நாள் அந்த அம்மா சொன்னார்... 'அந்த விபத்தில் அவனுக்கு ஏதேனும் ஆகியிருந்தால்கூட நல்லது என்று மிக மோசமாகக்கூட யோசித்தோம்' என்று.

ஓர் அம்மா இப்படியெல்லாம் நினைப்பாரா என்று நாம் நினைக்கலாம். ஆனால், தங்களுக்குப் பின் இந்தக் குழந்தை என்னவாகுமோ, யார் அவனைக் கவனித்துக் கொள்வார்கள் என்கிற நினைப்பே ஏராளமான வலியைக் கொடுக்கும். அந்த அளவு வேதனையானது இவர்களின் வாழ்க்கை. வாழ்வதே ஒரு சாதனையாக இருக்கும் இந்தச் சூழலில் மகத்தான சாதனைகளையும் நிகழ்த்தும் சாதனைக் குழந்தைகளைப் பாராட்ட நம்மிடம் வார்த்தைகள் இல்லை.

நிற்க... சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட E s p e c i a l என்ற வெனிசுலா படத்தின் கதையும் சிறப்புக்குழந்தை பற்றிய சிறப்பான கதைதான். C H U O - வின் வயது 23. ஆனால், இன்றும் டவுன் சிண்ட்ரோம் பிரச்னையால் பாதிக்கப்பட்ட குழந்தைதான். குழந்தைகள் எப்போது தங்களைக் குழந்தைகளாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்? இவனும் அப்படித்தான். தன்னை எல்லோரும் பெரிய மனிதனாகவே நடத்த வேண்டும் என்றே விரும்புவான். இதனால் அவனுக்கும் அப்பாவுக்கும் அடிக்கடி முட்டிக் கொள்ளும்.

அப்பா ஜோஸ். வயது 45. இசைக்கலைஞர். மனைவி இல்லை. மகனோ இப்படி. வாழ்க்கை இப்படியாகி விட்டதே என்கிற பெரும் விரக்தியில் குடியிலேயே மூழ்கிக் கிடப்பவர். சிறப்புக் குழந்தைக்குத் தேவையான அன்பையும் அனுசரணையையும் எப்படி வழங்குவது என்று அறியாமல் தவிப்பவர்.

Chuo-க்கும் ஒரு கனவு உண்டு. அது புகழ்பெற்ற ஓவியர் ஆவது. ஆம்... அவனுக்கு அசாத்தியமான ஓவியத் திறமை உண்டு. அதனால் வெனிசுலாவில் ஆண்டுதோறும் நடக்கும் டவுன் சிண்ட்ரோம் ஓவியர்களுக்கான போட்டியில் பங்குபெற்று திறமையை வெளிப்படுத்த விரும்புகிறான். இதனிடையே அவன் சந்திக்கும் ஒரு பெண்ணின்மீது காதல் கொள்கிறான். அவள் இவனது முயற்சிகளுக்கு உதவுகிறாள். ஒரு வேலையிலும் சேர்க்கிறாள்.

இப்படி டவுன் சிண்ட்ரோம் குழந்தைகளின் வாழ்க்கையை நேர்த்தியாகப் படமாக்கியிருக்கிறார் இதன் இயக்குநர் Ignacio Marquez 15 ஆண்டுக்காலம் டவுன் சிண்ட்ரோம் குழந்தைகளோடு பணியாற்றியவர். அதனாலோ என்னவோ சிறப்புக் குழந்தையின் இயல்பையும் உணர்வையும் மிக யதார்த்தமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார்.

இசையும் ஓவியமுமாக ஒரு கறுப்புக் கவிதையாக உருவாகியிருக்கிற இந்தப் படம் சென்னை சர்வதேச திரைப்பட விழாவின் சிறப்புப் பட்டியலில் இடம்பிடிக்கிறது.

இந்தப் படத்தின் சில காட்சிகள் 'பேரன்பு' திரைப்படத்தை நினைவூட்டுகின்றன.

- வள்ளிதாசன்

# மகனைத் தேடி...

தேடல் என்பது நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏதேனும் ஒருவிதத்தில் நடந்துகொண்டே இருக்கிறது. எதையோ தேடுகிறோம். யாரையோ தேடுகிறோம். இருப்பதைத் தேடுகிறோம். இல்லாததையும் தேடுகிறோம். இந்தத் தேடல்களில் ஒருவகை அல்ல அந்த அம்மாவின் தேடல். சட்டென தொடர்பு எல்லைக்கு அப்பால் சென்றுவிட்ட மகனைத் தேடி அம்மாவும் அப்பாவும் ஈரானிலிருந்து கிரீஸ் நாட்டுக்கு வருகிறார்கள்.

படிப்பதற்காக ஏதென்ஸ் வந்த மகன் தங்கியிருக்கும் இடம் தேடிப் போய் பார்த்தால் பூட்டிக் கிடக்கிறது. விசாரித்தால் இரண்டு மாதங்களாக ஆளையைக் காணோம், வாடகை பாக்கி வேறு என்கிறார்கள். வாடகை பாக்கியைத் தந்துவிட்டு அன்றைய இரவை அங்கேயே கழிக்க முடிவெடுக்கிறார்கள் அந்தப் பெற்றோர்.

பல்கலைக்கழகத்தில் விசாரித்தால் மகனைப் பற்றிய தகவலுக்குப் பதிலாக அடுத்த அதிர்ச்சி கிடைக்கிறது. அவன் இரண்டாவது ஆண்டிலிருந்தே கல்லூரிப் பக்கம் காலடி எடுத்துவைக்கவில்லை. மாணவர் பட்டியலிலேயே அவன் பெயரைக் காணோம்.

ஏதென்ஸ் நகரின் இருண்ட இடங்களைக்கூட விடாமல் அம்மாவும் அப்பாவும் தேடித்



திரிகிறார்கள். எங்கும் நம்பிக்கையூட்டும் தகவல் இல்லை. இதற்கிடையே மகனின் புத்தகத்தில் ஒரு துப்பு கிடைக்கிறது. A என்கிற குறியீட்டை வைத்து அடுத்த தேடலை ஆரம்பிக்கிறார்கள். அனார்க்கி அரசியல் குழுவில் அவன் இயங்குவதாக ஒரு தகவல் கிடைக்கிறது. தேடல் கிடைக்கிறது. அங்கு நடக்கும் கலவரத்தில் பையனும் அம்மாவும் அப்பாவும் பிரிந்துபோய் இன்னுமொரு தேடல் படலம்.

பாலியல் தொழிலாளி பெண்களோடு இவனுக்குப் பழக்கம் என்று யாரோ சொல்ல, அம்மா அவர்களைத் தேடிப் போய் விசாரிக்கிறாள். அவர்களில் ஒரு பெண், அவன் கப்பலில் வேலை செய்வதாகவும் எப்போதாவதுதான் இங்கு வருவான் என்று சொல்கிறாள்.

இதற்கிடையே கணவன் திடீரென மரணிக்க அடுத்த தவிப்பு ஆரம்பமாகிறது. அவனது உடலை நாட்டுக்கு எடுத்துச் செல்வது குறித்த சிக்கல்கள்... இன்னொரு பக்கம் மகனைத் தேடுவதைத் தொடர்தல்... இப்படி ஒரு தாயின் அவஸ்தை.

இறுதிக்காட்சியில் ஒரு கப்பல்... அம்மா அங்கு நிற்க, அவளை கப்பலிலிருந்து வந்த ஓர் இளைஞன் நோக்குகிறான். படம் நிறைகிறது.

இந்தப் படத்தின் இயக்குநர் Siamak Etemadi. படத்தின் பெயரான Pari ஆக Melika Foroutan என்ற ஈரானிய நடிகை.

- கே.கணேசன்

## Pic Corner



Mazaiyil Nanaigiren Team @ CIFF

CIFF DAILY BUZZ
18th Chennai International Film Festival
24th Feb 2021

# இன்று என்ன படம் பார்க்கலாம்?

- R.S.Prakash

## All the Pretty Horses | SDC Anna, 01.00 PM




கணவன், மனைவி அவர்களது இளவயது மகன் ஆகிய மூன்று கதாபாத்திரங்களை அடிப்படையாக வைத்து கதையை கையாண்டுள்ளார் இயக்குனர், Michalis Konstantatos. பஞ்சம் மற்றும் வறட்சி ஆகிய காரணங்களால் தாம் வாழும் ஊரை விட்டுவிட்டு கடல்சார்ந்த ஊர் ஒன்றில் தஞ்சம் புகுகின்றனர் Aliki மற்றும் அவளது கணவன் Petros. தங்களது ஒரே மகனான Panagiotis இன் நலமே அவர்கள் இருவரின் ஒரே குறிக்கோள். கடினமாக உழைத்து பணம் சம்பாதித்து சொந்த ஊர் திரும்புவதற்காக பெரும் முயற்சி செய்கின்றனர்.

தத்ரூபமான காட்சிகள் ; யதார்த்தமான நடிப்பு -இரண்டுமே படத்தின் சிறப்பம்சங்கள் .

## Amala | Seasons, 02.30 PM



மலையாள படஉலகை சார்ந்த Nishad Ebrahim என்கிற பெண்ண, எழுதி, தயாரித்து இயக்கியுள்ள படம். மணி இனத்தின் மாறுபாட்டை தக்க சம்பவங்களின் வாயிலாக திரையில் படிவுசெய்கிற ஒரு படமிது. காதல் உணர்வுபூர்வமான அன்பு என பல்வேறுபட்ட குண இயல்புகளையும் இயக்குனர் அழகுற யதார்த்தமாக சிருஷ்டிக்கப்பட்ட கதாபாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். Srikanth, Appani Vijayan, Bitto மற்றும் Nandini Shuhaibu முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். Gopi Sundarரின் இசையும் Abhilash Shankar இன் ஒளிப்பதிவும் Noufal Abdullaவின் படத்தொகுப்பும் படத்தின் தரத்தை மேலும் உயர்தியுள்ளன.

## Pic Corner




My Name is Anandhan Team @ CIFF

## Apples | Santham, 01.00 PM



Christos Nikou வின் இயக்கத்தில் அமைந்துள்ள இப்படம் Venice பட விழாவில் துவக்க நாள் படமாக திரையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கிரேக்க நாட்டின் பிரிதிநிதியாக இப்படம் Oscar போட்டியிலும் பங்குகொண்டது! Corona போல, உலகம் முழுவதையும் ஆட்கொண்ட ஒருவித விசித்திரமான நோய். அதன் விளைவாக பலரும் ஞாபக மறதியினால் பாதிக்கப்படுகிறார்கள். Aris என்கிற ஒரு நடுத்தர வயதை சார்ந்த ஒருவன், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வருகிறான். அவனது செயல் பாடுகள்தான் படத்தின் திரைக்கதை ஓட்டம்! Bartosz Swiniarski இந்த ஒளிப்பதிவு படத்தின் குறிப்பிடத்தக்க அம்சம்.

## Listen | 6 Degrees, 09.30 PM



நடிகையும் இயக்குனருமான அனா Rocha வின் கைவண்ணத்தில் துலங்கும் இப்படைப்பு London மாநகரின் ஒதுக்குப்புற பகுதியில் வாழும் Bela மற்றும் Jota என்கிற ஒரு தம்பதியின் குடும்ப நிலையை சுற்றி பின்னப்பட்டுள்ள கதையம்சம் கொண்ட உயரிய உன்னதமான படைப்பிது. அவர்களது மகள், 7 வயது நிரம்பிய காது கேளா சிறுமி. இவர்களின் மனோநிலைப்பற்றியும் வாழ்க்கை நடத்த அவர்கள் படும் இன்னனல்கள் பற்றியும் விவரிக்கிறது இதன் திரைக்கதை. வெகு பொருத்தமான படத்தலைப்பு!

## பார்வையாளர்களிடமிருந்து...

நமது நடிகையர் திலகம் சாவித்திரி,போலந்து நாட்டில் 'சோபி ஸ்டபெஜ்' என்ற பெயரில் மறுபிறவி எடுத்து நடித்த படம் 'ஐ நெவர் க்ரை'. படம் நிறைவடைந்ததும் அரங்கில் எழுந்த கரவொலியும்,விசில் சத்தமும்,ஆர்ப்பரிப்பும் போலந்து தேசத்திற்கே கேட்டிருக்கும்.

'ஆண் நெடில்' என குறியை நீட்டினால் அறுத்து விடுவாள் ஓலா. ஓலா என்ற பெயரில் படம் முழுக்க ஒரு புயல்தான் திரையில் வீசிக்கொண்டு இருந்தது. புயல் பூவாக மாறும் தருணங்களும் படத்தில் உள்ளன. ஓலா என்ற கதாபாத்திரம் அனைத்து காட்சியிலும் இடம் பெறும் வகையில் திரைக்கதையை கட்டமைத்து இருக்கிறார் இயக்குநர். இந்த வகை திரைக்கதைக்கு 'ஹீரோஸ் ஜேர்னி' என்ற பெயர் எத்தனை முரணாக இருக்கிறது!.

ஓலா தானும் அழ மாட்டாள். பிறரையும் அழ வைக்க மாட்டாள்.
உலக சினிமாவின் உன்னதம் 'ஐ நெவர் க்ரை'.

**அன்புடன்,**
**உலக சினிமா பாஸ்கரன்,**
**இன்ஷா அல்லாஹ் திரைப்பட இயக்குநர்.**

Movie Review of Thi.Mi.Ram: ஆணாதிக்கம் அகன்று பெண்கள் இன்று சுதந்திரமாகவும் சமமாகவும் சுலபமாகவும் வாழும் இவ்வுலகில் இன்னும் ஆண் என்ற கர்வத்தோடு சமமாய் பாராத மனதோடு வாழ்வின் இறுதிவரை வாழ்ந்த ஒரு குடும்பத் தலைவரின் மனப்போக்கை அலசி தனக்கே உரிய பாணியில் கூறியுள்ளார் இயக்குனர். அதனோடு இயக்குனராக துடிக்கும் இளைஞனின் வாழ்வையும் வாழ்வியலோடு சேர்த்து காட்டிய விதம் அபாரம். கண்ணில் புரை விழுந்த ஒருவரின் பார்வையோடு அவரது தவறான மனப்பான்மை தெளிவு பெறுவதை உருக்கமாக உணர்த்திய அருமையான படம் - **by Surendar**

## Our Sponsors and Partners

HOSPITALITY PARTNER: THE SAVERA — OUR BUSINESS IS YOU
SPONSORED BY: ACCORD METROPOLITAN HOTEL
PRINT PARTNER: இந்து தமிழ் திசை
SUPPORTING ORGANIZATIONS: TAMIL FILM PRODUCERS COUNCIL, TANTIS
VENUE PARTNERS: PVR Multiplex, SDC ANNA
CULTURAL PARTNERS: Alliance Française Madras, Ambassade de France en Inde, Goethe Institut Max Mueller Bhavan, Embassy of Hungary
MOVIE INFO PARTNER: MOVIEBUFF
ONLINE KDM & DCP DELIVERY SERVICE: QUBEWIRE, QUBE
MADRAS TALKIES
DESIGN PARTNER: Graphics
PRESS RELATIONS
ONLINE TICKETING PARTNER: bookmyshow